அனுப்புநர்

**உறுப்பினர் செயலர்,**
சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்,
எண். 1, காந்தி இர்வின் சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.

பெறுநர்

**ஆணையாளர்,**
சென்னை மாநகராட்சி,
சென்னை – 600 003.

---

கடித எண். பி3/28886/2007

நாள் :5.9.2008

அய்யா,

பொருள் : செ.பெ.வ.கு. – திட்ட அனுமதி – நில அளவை எண்.218/2 மற்றும் 219 பகுதி பிளாக் எண். 9எ, நடுவாக்காரை கிராமம், கதவு எண்.255/1-6 எ.எல். பிளாக், 4வத நிழல்சாலை சாந்தி காலனி, அண்ணாநகர், சென்னையில் வாகன நிறுத்துத் தளம் + 3 தளம் + 4வது தளம் பகுதி கொண்ட 4 குடியிருப்புகள் கொண்ட கட்டிடம் ஒப்பளிக்கப்பட்டிருப்பது – தொடர்பாக.

பார்வை :

1. சிறப்புக் கட்டிடப் பிரிவு எண். 1345இல் நாள் 14.12.2007 அன்று பெறப்பட்ட திட்ட அனுமதி விண்ணப்பம்.
2. இதே எண். கொண்ட இவ்வலுவலக கடித நாள் 11.2.08
3. விண்ணப்பதாரரின் 21.2.08 நாளிட்ட கடிதத்துடன் கிடைக்கப் பெற்ற விபரங்கள்
4. இதே எண். கொண்ட இவ்வலுவலக கடித நாள் 13.5.08
5. விண்ணப்பதாரரின் 10.7.2008 நாளிட்ட கடிதத்துடன் வளர்ச்சிக் கட்டணம் மற்றும் பிற கட்டணங்கள் செலுத்தியதற்கான ரசீது கிடைக்கப் பெற்றது.
6. இதே எண். கொண்ட இவ்வலுவலக கடித நாள் 3.7.08
7. விண்ணப்பதாரரின் 13.8.08 நாளிட்ட கடிதத்துடன் உள் கட்டமைப்பு வசதிக் கட்டணம் செலுத்தியதற்கான ரசீது கிடைக்கப் பெற்றது.

*****

நில அளவை எண்.218/2 மற்றும் 219 பகுதி பிளாக் எண். 9எ, நடுவாக்காரை கிராமம், கதவு எண். 255/1-6 எ.எல். பிளாக், 4வது நிழல்சாலை சாந்தி காலனி, அண்ணாநகர், சென்னையில் வாகன நிறுத்துத் தளம் + 3 தளம் + 4வது தளம் பகுதி கொண்ட 4 குடியிருப்புகள் கொண்ட கட்டிடத்தைக் கட்டுவதற்கு பார்வை–4ல் சமர்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் பார்வை–4இல் கண்டுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்பளிக்கப்படுகிறது.

3. விண்ணப்பதாரர் பார்வை ..............இல் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளை ஒப்புக்கொண்டு ரசீது எண் 001659, 001660 மற்றும் 000086, நாள் 10.07.2008 மற்றும் 002242, நாள் 14,8,08 இல் கீழ்கண்ட கட்டணங்களை செலுத்தியுள்ளார்.

| | | |
|---|---|---|
| 1. | நிலம் மற்றும் கட்டிட வளர்ச்சிக் கட்டணம் தமிழ்நாடு வளர்ச்சி மற்றும் ஊரமைப்புச் சட்டம் (1971இல் பிரிவு 59ன் கீழ்) | ரூ. 19,000/- (ரூபாய் பத்தொன்பதாயிரம் மட்டும்) |
| 2. | கூர்ந்தாய்வுக் கட்டணம் (மிகுதி) | ரூ.150/– (ரூபாய் நூற்றி ஐம்பது மட்டும்) |
| 3. | வரன்முறைக் கட்டணம் | ரூ. 56,000/– (ரூபாய் ஐம்பத்தாறு ஆயிரம் மட்டும்) |
| 4. | திறந்தவெளிக் கட்டணம் வளர்ச்சிக் கட்டுப்பாடு விதி | – |
| 5. | காப்புறுதிக் கட்டணம் (உத்தேச வளர்ச்சிக்காக) | ரூ.75,000/– (ரூபாய் எழுபத்தைந்தா –யிரம் மட்டும்) |
| 6. | கழிவுநீர்த் தொட்டிக்கான காப்புறுதிக் கட்டணம் | – |
| 7. | அறிவிப்புப் பலகைக்கான வைப்பு நிதி | ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) |
| 8. | உள் கட்டமைப்பு வசதிக் கட்டணம் | ரூ. 5,59,000/- (ரூபாய் ஐந்து இலட்சத்து ஐம்பத்தி ஒன்பதாயிரம் மட்டும்) |
| | மொத்தம் | ரூ. 7,19,250/– (ரூபாய் ஏழு லட்சத்து பத்தொன்பதாயிரத்து இருநூற்றி ஐம்பது மட்டும்) |

4\. அ. குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான கட்டணத்திற்காக, மேலாண்மை இயக்குநர், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் என்ற பெயரில் எடுக்கப்பட்ட ரூ. 95,100/- (ரூபாய் தொண்ணூற்றி ஐந்தாயிரத்தி நூறு மட்டும் ) –க்கான வரைவோலையை விண்ணப்பதாரர் தனது ................... நாள் கடிதத்துடன் கொடுத்துள்ளார்.

ஆ. கழிவு நீரகற்று அமைப்பைப் பொறுத்தவரை, சென்னை குடிநீர் வாரியத்திடம் முறையான விண்ணப்பத்தை நேரடியாகச் சமர்ப்பித்து, உரிய அனுமதியைப் பெற்ற பின்தான், வேலைகளை ஆரம்பிக்க வேண்டும்.

இ. குடிநீர் வழங்கலைப் பொறுத்தவரை, சென்னைக் குடிநீர் வாரியம் குடிக்கவும், சமையலுக்காகவும் மட்டுமே நீர் வழங்க இயலும். வழங்கப்படும் நீரின் அளவும் ஒரு குடியிருப்பிற்கு அதிகபட்சமாக 5 பேருக்கும், ஒருவருக்கு ஒரு நாளைக்கு 10 லிட்டர் அளவிற்குமே இருக்கும். வேறு உபயோகங்களுக்குத் தேவையான நீருக்காக கட்டிடம் கட்டுபவரே வேறு ஏற்பாடுகளை உறுதி செய்து கொள்ள வேண்டும். மேலும் கழிவு நீரகற்றுத் திட்டத்திற்கு ஒப்புதல் பெற்ற பிறகு, குடிநீர் இணைப்பிற்காக விண்ணப்பிக்க வேண்டும். இணைப்பிற்கான அனுமதி கிடைத்தபின்தான் குழாய் அமைப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். அனைத்துக் கிணறுகளும், மேல்நிலைத்

தொட்டிகளும் கழிவுநீர்த் தொட்டிகளும், கொசுத் தொல்லைகள் இல்லாவண்ணம், சுகாதாரமுறையில் பாதுகாப்பாக மூடப்பட்டிருக்க வேண்டும்.

5. ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டியுள்ளபடி மழை நீர் சேகரிப்பு அமைப்பைத் திருப்திகரமாக அமைக்காதிருப்பது ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடித்திலிருந்தும், வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளுக்கும் மீறிய செயலாகக் கருதப்படும். அதன்மீது அமலாக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

6. B/Spl Bldg/191/2008 நாள் 5/9/2008 என எண்ணிடப்பட்ட இரு ஒப்பளிக்கப்பட்ட வரைபடங்களின் தொகுதிகள் இத்துடன் அனுப்பப்படுகின்றன. இத்திட்ட அனுமதி 5/9/2008 இருந்து 6/9/2011 வரை செல்லுபடியாகும்.

7. இந்த ஒப்பளிப்பு இறுதியானது அல்ல. உள்ளாட்சி அமைப்புச் சட்டத்தின் கீழ் கட்டிட அனுமதி பெறுவதற்கு, விண்ணப்பதாரர் சென்னை மாநகராட்சியை அணுக வேண்டும். கட்டிட அனுமதி பெற்ற பிறகுதான் கட்டிடத்தைக் கட்டத் தொடங்கலாம்.

8. கட்டிடம் கட்டப்படுவதைக் கண்காணிக்குமாறும், அது ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தின்படியே கட்டப்படுகிறது என்பதை உறுதி செய்து கொள்ளும்படியும், அவ்வாறில்லாமல், ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டப்பட்டால் உடனுக்குடனேயே அமலாக்க நடவடிக்கைகளை எடுக்குமாறும் உள்ளாட்சி அமைப்பு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

ஸெ. அ. கோவிந்தராஜன் 5/9/08

உறுப்பினர் செயலருக்காக.

5/6
11/9/08

இணைப்பு :

1. ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தின் இரண்டு படிகள்
2. திட்ட அனுமதியின் இரண்டு படிகள்

நகல் :

1. திரு தமீம் அன்சாரி,
142, கிரீம்ஸ் சாலை,
ஆயிரம் விளக்கு, சென்னை—600 006

2. உறுப்பினர்,
உரியதுறை (Appropriate Authority),
108, உத்தமர் காந்தி சாலை, நுங்கம்பாக்கம்,
சென்னை – 600 034.

3. வருமான வரி ஆணையர்,
168, உத்தமர் காந்தி சாலை, நுங்கம்பாக்கம்,
சென்னை – 600 034.

4. துணை திட்ட அமைப்பாளர்,
செயலாக்கப் பிரிவு, செ.பெ.வ.குழுமம், சென்னை – 8.